ரிஜிஸ்டர்டு நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா | வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரு 3—0 |
| 6 மாத சந்தா ,, — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கிலவரு ஆனிமீ 24உ (7—7—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 9

புத்தகம் 1-க்கு



இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.
*Mysteries of Wedded Life.*
இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.
எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்
வாஸன் புஸ்தகசாலை,
244, தங்கசாலைவீதி, சென்னை.

விலை ரூ. 2—0—0

## முன்னேற்றம்

இஃது
சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்:-
வே. சி. நாராயணசாமி,


இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர்,
"முன்னேற்றம்"
(எப்) 155, ஸிலிரோட், சிங்கப்பூர்.

அதி நூதனம்! மிக ஆச்சரியம்!!

மாதம் 100 ரூபா முதல் 300 ரூபா வரை சம்பாதிக்கக்கூடிய

## சிறிய சைஸ் தையல் இயந்திரம்



இது சாதாரண பெரிய தையல் மெஷின்களைப் போலவே சிறிய சைஸில் உள்ளது. இதை மேஜையின் பேரிலோ நாற்காலியின் பேரிலோ வைத்து ஒக்கி எந்த விதமான தையல் வேலையும் செய்யலாம். தையற்காரர்களிடம் நீங்கள் போகவேண்டிய அவசியமேயில்லை. தையற்காரர்களும் 100, 200 போட்டு பெரிய மெஷின்கள் வாங்க வேண்டியதில்லை. சட்டைகள், கோட்டுகள் முதலியன எதுவும் இலகுவில் தைக்கலாம். இந்த மெஷினில் ஒரு குழந்தையும் வேலை செய்யலாம். இதைச் சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் போட்டு ஜாக்கிரதையாகப் பாக்கிங் செய்து அனுப்பப்படும். 5 வருஷம் காரண்டியுள்ளது.

விலை ரூபா 4-12-0. தபால் செலவு வேறு.

உடனே எழுதுங்கள்.

Agents:—
PARIS EMPORIUM George Town, Madras.

## ஸ்ரீகிருஷ்ணானந்த கௌதம பரிமள ஸ்டோர்

குணம் குன்றாது! மணம் மாறாது!

எங்களிடம் குளிர்ந்த சந்தனாதித் தைலம், வாசனைமிகுந்த அரைக்கீரை விதைத் தைலம், மயிர் வளரும் கோபிகா கூந்தல் தைலம், பற்பொடி, உயர்ந்த ஊதுவத்தி தினுசுகள், புனுகு, ஜவ்வாது, அரகஜா, பன்னீர் இன்னும் அநேக வாசனை சாமான்கள் கிடைக்கும். இனாமாக கேட்லாக் அனுப்பப்படும்.

எங்களிடம் 20 குதிரை ஓட்டமுள்ள (Second Hand) ஆரன்ஸ்பீ குருடாயில் இஞ்சின் செட்டுடன் விற்பனைக்குத் தயாரில் இருக்கிறது. வேண்டிய விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

விலாசம்:—

மானேஜர்
ஸ்ரீகிருஷ்ணானந்த
கௌதம பரிமள ஸ்டோர்,
வலங்கைமான்
(*Via*) கும்பகோணம்.

## குமரன்

தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை,

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும், கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—
வாரப்பதிப்பு ரூ. 5—0—0
மாதப்பதிப்பு ரூ. 1—8—0

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

(1916 வரு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுப்போம். மற்ற விவரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,
(16) மைலாப்பூர், மதராஸ்.

எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை.

இனும்! இனும்!!



பூனையில் இரிடியம் உள்ள 14 காரட் தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனும். எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. உத்தரவாதமானது.

உடனே எழுதுங்கள்.

ஜீனியன் வாட்சு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு,

(4 எப்) மதராஸ்.

## தேவை

டபுள் கிரவுன் அல்லது ராயல் பழைய பிரிண்டிங் மிஷின் நல்ல நிலைமையில் உள்ளது தேவை.

விலாசம்:—

Manager

Bethany Press

Tiruvalla P. O.

Travancore

சித்திரன் வெற்றி

இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர் அனுபவிக்க வேண்டிய சம்சார சுகங்கள், குடும்ப ரஹசியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் ஆகிய அனைத்தும் நிரம்பிக் கிடக்கின்றன. 475 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 2—4—0.

சரீர சாஸ்திரம் 1—0—0

முத்தத்தின் மர்மம் 1—8—0

மதனுசமம் 1—0—0

தபால் கூலி வேறு—விவர ஜாப்தா இனும்.

விலாசம்:—

லக்ஷ்மண ப்ரசாத் கம்பெனி,

(டிபார்ட் 19) புதுச்சேரி

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

சுத்தமான இரண்டாம் பதிப்பு.

ஆபத்துக்குதவும் தோழன்! அருமையான நேசன்!!

## தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்.

MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனி போல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிட வேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் "ஆபத்துக்குதவும் தோழன்" என்று யாவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தங்களே கூடியவரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்துகொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும்.

இங்கிலீஷ் வைத்தியத்தைக் கையாடுகிறவர்களுக்கும், இங்கிலீஷ் வைத்தியம் கற்கும் கம்பவுண்டர்களுக்கும், இங்கிலீஷ் ஷாப்புகளுக்கும் உபயோகப்படுமென்ற நோக்கத்தைக்கொண்டும், இங்கிலீஷ் வைத்தியத்தை இங்கிலீஷ் பாஷையில் மிகவும் விரிவாய் எழுதியிருந்தபோதிலும், தமிழில் சுருக்கமாய் எழுதியிருந்தால் இங்கிலீஷ் மருந்துகளைப்பற்றியும், அவைகளின் குணங்கள், அளவுகள், வியாதிகளுக்குத் தகுந்தபடி உபயோகப்படுத்தவேண்டிய விவரங்களைப்பற்றியும், கடினமின்றித் தெரிந்துகொள்ளக்கூடுமென்ற எண்ணத்தைக்கொண்டும் இப்புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்புஸ்தகம் ஒரு குடும்ப பொக்கிஷம் என்று சொல்லலாம். இப்புஸ்தகத்தைப் படித்தால் ஒவ்வொருவரும் தாமே வைத்தியராகி விடலாம். 480 பக்கங்கள்கொண்ட பெரிய புஸ்தகம். கிளேஸ் காகிதத்தில் அச்சியற்றப்பட்டு அழகிய சீமை கலிகோ பையிண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா 3. (மூன்று தான்)


கருணாநிதி டிபோ,

1/6 வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!!

PHOTO HAND CAMERA

ரொம்பவும் குறைந்த விலை ரூபா 2—15—0.



நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. இந்த காமிராவை வாங்கி நூறு பேர்கள் பணம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டனர். போட்டோவின் அளவு 3×2½ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூபாய் 2-15-0 க்கு கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்:

கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னீஷ்கள், பிஸ்கத்துகள், பென்ஸில்கள், பலவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள் கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் எரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது.

ரூபா 1—8—0

உடனே எழுதுங்கள்.

வாவன் புஸ்தகசாலை,

314 ... சாலை வீதி, மதராஸ்.

ஒரு மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப் போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீறுப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். ஒரு குளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் திடுக்க இன்பம் உண்டாகும்.


டப்பி 1 ரூபாய் 2—0—0

ஸ்ரீதன அண்டு கம்பெனி,

(4-பி) தபால்பெட்டி 119, மதராஸ்.

ரூ. 2—14—0 ரூ. 2—14—0

நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். பஷ்மின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1-க்கு ரூ. 2—14—0.

கனடியன் வாட்சு பீபிள்,

ஸோல் ஏஜண்ட்ஸ்,

(4-டி.) ஜார்ஜ் டவுன், மதராஸ்.


## பகுத்தறிவு

கூடிய விரைவில் "குடி அரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருட சந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

விலாசம்:— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை.

வியாபாரத்திற்கழகு விளம்பரம்செய்தல்



கர்ப்பாட்சி யில்லாததனல் வந்த விபத்து

## கர்ப் பாட்சி

அல்லது

## சுவாதீனக் கர்ப்பம்

இது இல்லற வாழ்க்கையின் மகோன்னத கர்ப்பாட்சி ரகசிய முறைகளைத் தெளிவாக அநுபவசித்தமாய் விளக்கக்கூடியதாகும். உலகத்திலுள்ள பல தேசத்தாரும் கையாண்டு அநுபவித்துவரும் கர்ப்பாட்சி முறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு தற்கால அநுபோகத்திலிருக்கக்கூடியதான இந்த சுவாதீனக் கர்ப்ப ரகசிய முறைகளைப் பண்டிதர்முதல் பாமரர் வரையிலுள்ள ஸ்திரீ புருஷர்கள் யாவரும் எளிதில் வாசித் தறிந்துகொள்ளும் வண்ணம் தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதுடன் ஆண் பெண் மர்ம அவயவச் சித்திரப் படங்களும், கர்ப்பாட்சிக் கருவிகளின் அநேக சித்திரப் படங்களும் அவைகளின் உபயோகங்களும் இந்நூலில் செவ்வனே விளக்கப்பட்டிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திலும் இந்நூல் அவசியமாக இருக்கவேண்டியதாகும். ஷை நூலின் விலை அணா 8.

(தபால் பில்லையாக 9 அணா அனுப்பவும்)

புலவர் புத்தகசாலை, வேப்பேரி, மதராஸ்.


## மூனுசாவடி தேவி விலாஸ் வாசகசாலை முதலாவது ஆண்டு விழா

13-6-29-ந்தேதி மூனுசாவடி தேவி விலாஸ் வாசகசாலையின் முதலாவதாண்டு விழா உயர்திரு சாமி சதாசிவம் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. வரவேற்புக் கழகத் தலைவர் திரு எஸ். ஆர். அத்தியப்பர் அவர்கள் சபைத்தலைவரவர்கட்கும், ஐந்தாவதாண்டு "குடி அரசு" பத்திரிகைக்கும் தனித்தனி வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுத்தார். உயர்திருசாமிசதாசிவம் அவர்கள்முன்னுரைச் சொற்பொழிவில் பார்ப்பனீயத்தின் கொடுமையையும் சுயமரியாதை இயக்கத்தின் மேன்மையை ஒருங்கே விரிவாக விளக்கிப் பேசினார்கள். திரு. பெரியசாமி அவர்கள் "ஆஸ்திகமும் நாஸ்திகமும்" என்பதுபற்றிப் பிரசங்கம் செய்தார். திரு. குப்புசாமி அவர்கள் பனகால் அரசா உருவப்படத்தைத் திறந்து வைக்கும்போது "வேதமும் பார்ப்பனரும்" என்னும் விஷயத்தை விரித்து உரைத்தார். பல கனவான்கள் பேசியபின் சுயமரியாதைக்கு ஜே! என்ற முழக்கத்துடன் கூட்டம் முடிவுற்றது.

ஐந்தாவதாண்டு "குடி அரசு" பத்திரிகைக்கு வாசித்துக் கொடுத்த வரவேற்புப் பத்திரமாவது:—

அங்கிங்கெனுதபடி எங்கும்
பிரகாசமாய்,
அகிலத்தில் வந்துலாவும் ஹே! 'அரசனே' வருக! வருக!! நின் வரவு நல்வரவாகுக!!! எல்லாம் வல்லவர்களினருளால் நம்மக்களின் அடிமைத்தனத்தை நீக்கி அவர்களை நற்கரை சேர்க்கும் தோணிபோல் வந்த அவதார புருட திலகமே!

வருக! வருக!! வருகவே!!!

அன்பே ஆபரணமாய்ப் பூண்டு, அறநெறிகளை ஐயம், திரிபு, அறியாமை, கேட்டுணர்மை, பேதமை, சாத்திரக் குப்பை, சமயக்குப்பை, வேதக் குப்பை, கேள்விக் குப்பை கூளங்களைக் களைந்து உண்மைத் தெற்றென விளக்கிக் காட்டும் ஞானதித்த அரசனே வருக! வருக!! வருகவே!!!

பார்ப்பனர் கொடுமையால் தியங்கி நிற்கும் நம்மவர்களைப்பாலனுகிய நீ நான்கு ஆண்டுகளாய் வஞ்சகத் தீமையைக் காய்க்கச் செய்த பொது நல ஊழியனே வருக! வருகவே!!

ஞானவிர்தத்தைசோனைமாரியாகப் பொழிகின்ற நின்னை யாங்கள் வரவேற்கும் பாக்கியத்தைப் பெற்றமைக்கு மிக்க மகிழ்வெய்துகிறோம். சமரசமே சன்மானமாகக் கொள்ளும் சுவரசமே நீ! பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! வாழ்க!! வாழ்கவே!!!

இங்ஙனம்,
அம்பலம், எஸ். ஆர். அத்தியப்பர்
வரவேற்புக் கமிட்டித் தலைவர்


குறைந்த சந்தா! நிறைந்த விஷயம்!!

# "ஆனந்தபோதினி"

## ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை

"ஆனந்தபோதினி" மாதசஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், பலநடைய வேண்டுகோளின்மேல் மாதசஞ்சிகையோடு "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பெரும்புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறநம் மதசழக தேசீய முன்னேற்றத்தைப்பற்றிய தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கொட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டி மிருக்கின்றனர்.

## உங்களுக்கு என்ன வேண்டும்?

- மத உண்மைகளா?
- தத்துவ ஆராய்ச்சிகளா?
- கைத்தொழில் விளக்கங்களா?
- வியாபார ரகசியங்களா?
- விஞ்ஞான (Science) விநோதங்களா?
- கிராமச் சீர்திருத்தங்களா?
- சமூக இயல்களா?
- வைத்திய விசேஷங்களா?
- தேசீய தத்துவங்களா?
- சிறுகதைப் பகுதிகளா?
- இன்னிசைப் பாட்டுக்களா?

எல்லாவற்றிற்கும் "ஆனந்தபோதினி" வாரப் பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருடசந்தா ரூ. 3, 6 மாத சந்தா ரூ. 1-12-0.
பினங்கு, சிங்கப்பூர், முதலிய வெளிநாடுகட்கு வருட சந்தா ரூபா 4.

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.



## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ்நாட்டில் வெளிவரும் மாதப் பத்திரிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதாரர்களையுடையது; கல்விப் பிரசித்தி பெற்ற பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த விஷயங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தினர்க்கும் சம்மதமான பொது நன்மையைப் போதிப்பது; 64-பக்கம் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், வயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் ஒழுங்கு தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாக் கொண்டது.

மாதிரி காபி இலவசம்.

வருட சந்தா தபால் கூலி உட்பட உள்நாட்டுக்கு ரூ. 1—0—0 வெளிநாட்டுக்கு ரூ. 1—4—0


## கடவுள் கடவுளென்று காசைத் தொலைக்காதே

## சகல வியாதிகளுக்கும் உயர்ந்த அனுபவமுள்ள மருந்துகள்.

கிடைக்குமிடம்:—பழனி வைத்யபதி ஆர். எம். நாராயணசாமி பிள்ளை தன்வந்திரி வைத்தியசாலைதான் என்பதை எப்பொழுதும் உங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

குஷ்டம் 18-க்கும்:—கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெள்ளைக் குஷ்டம், குறைநோய், லிங்கபுற்று, யோனிபுற்று, பவுத்திரம், கண்ட மாலை, குழிப்புண், திமிர், மதமதப்பு, குடைச்சல், சூலை, கரப்பான், ஆறாத புண், புரை, கழலை, கட்டி, தடிப்பு, அரிப்பு, மேகசம்பந்தமான சகலத்திற்கும்.

மேகம் 20-க்கும்:—கிரந்தி, அரையாப்பு, நீரழிவு, வெள்ளை, வெட்டை, எரிச்சல், கடுப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, தந்தி மேகம் சகலத்திற்கும்.

ஏழுவித காசம்:—க்ஷயம், ஈளை, இருமல்களுக்கும்.

குன்ம வயிற்றுவலி 8-க்கும்:—இந்த வியாதிகளுக்கு அனுபானத்துடன், 1 மண்டலம் ரூ. 5. ½ மண்டலம் ரூ. 3.

### அமிர்த சஞ்சீவி மாத்திரை.

ஜுரம் 64, வாதம் 80, பித்தம் 43, வாய்வு 310, ஜன்னி தோஷம், இரிவு, வலிப்பு, சயித்தியம் 108, ஸ்திரீகள் மாதாந்திர ஒழுக்கமில்லாத கெர்ப்பரோய் சம்பந்தமான வயிற்றுவலி சகலத்திற்கும், சகல பாம்புக் கடி, பொரி விஷம், கடிவிஷம், 800-ம் நிவர்த்திக்கக் கூடியது. சுக பேதிக்கும் உயர்ந்த பெருமருந்தாகையால் இதைப்பற்றி அதிகம் வரையவேண்டியதில்லை என்று எண்ணி ஏழைமுதல் தனவந்தர் வரை எளிதில் உய்யும்பொருட்டு விலை சரசமாக கொடுக்கிறோம். இதன் குணம் கண்டவர்கள் அந்தந்த பத்திரிகை வாயிலாகவே நோய் வாய்ப் படும் சகோதரர்களுக்கு புண்ணியம் தேடிய புருஷர்கள் ஆவீர்கள். அதே|காருண்யம் அன்பு|அருள். புட்டி 1-க்கு ரூ. 2. சின்ன புட்டி 1-க்கு ரூ. 1. வி. பி. சார்ஜ் வேறு.

வைத்தியபதி, ஆர். எம். நாராயணசாமி பிள்ளை,
தன்வந்திரி வைத்தியசாலை, பழனி.

---

## குடி அரசு புத்தகாலயம்

வேதப்புரட்டை வெளியாக்கும்,

| | | |
|---|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு | ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். | ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு | ... | 0—2—0 |


விலாசம்:—

**மானேஜர், குடி-அரசு புத்தகாலயம்,**
14, மவுண்ரோட், மதராஸ்.

---

## எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை

ரோல்டு கோல்டு "கோல்டன்" புது மாடல் கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப் படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப் படும். உத்தாரவாதமானது.

ரூபா 4—15—0 வி. பி. வேறு.

ஜீனன் வாட்சு கம்பெனி,
மிண்ட் பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

---

கைமேற்பலன்! அரியதோர் ஔஷதம்!

## அகஸ்தியர் அருளிய அசல் ஆயுள் விருத்தி ஆகாரம்

இது பார்வைக்கு லேகியம் போன்றிருப்பினும் சென்னையில் சில மோசக்காரர்கள் விற்றுப் பணம் சம்பாதிக்கும் உபயோகமற்ற லேகிய மல்ல. அகஸ்திய மஹாரிஷி அருளிப்போந்த சத்திய முறைப்படி. ஸ்வாமி பிரும்மானந்தரால் தயார் செய்யப்பெற்றது. முற்காலத்தில் அநேக மனைவிமார்களுடன் கூடி இன்புற்றிருந்த நவாப் மன்னர்களும், ராஜாக்களும், ஜமீன்தார்களும் தினசரி ஆகாரமாக இதையுண்டு நீண்ட ஆயுளுடன் களித்திருந்தனர். தற்காலத்தில் அநேக புருஷர்கள் பார்வைக்குத் திடமாகத் தென்பட்டாலும் மணவாழ்க்கையின் இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் சக்தியற்றவராய் இருக்கின்றனர். சிலர் சிற்றின்பத்தில் மிதமிஞ்சி உழன்று பலவிதமாய்த்தம் தேகத்தைக் கெடுத்துக்கொண்டு போக இச்சை இழந்து மனம் வாடுகின்றனர். இத் தகையோர் தகுந்த நம்பிக்கையான ஔடதம் அருந்தி தம் தேகத்தைச் சரியாகக் காப்பாற்றிக்கொள்ளாவிட்டால் தேகம் க்ஷீணமடைந்து ஆயுள் குறையும். மானிடர் பூரண சுகத்தையும் பூர்த்தியான ஆயுளையும் பெறுமாறு அகஸ்தியர் அருளிய ஆயுள் விருத்தி ஆகாரத்தை நீங்கள் அருந்திப் பாருங்கள். கைமேற்பலன் கிடைக்கும்.

இந்த ஆகாரத்தில் சேர்ந்துள்ள சாமான்கள்:—அரசம், அத்தி, புளி, மாதுளை, ஆவாரை, முசுமுசுக்கை, சிறு நன்னாரி, பெரு நன்னாரி, இதுபோன்ற வேர்களும், இன்னும் 80 வகை கடைச்சரக்குகளும், பொன், அம்பர், பாதம் பருப்பு, சாரப்பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா, செவ்விளநீர், பசும்பால், பசுநெய், மலைத்தேன் முதலியவைகளும் சேர்ந்திருக்கின்றன.

இதனால் தீரும் வியாதிகள்:—துரிதஸ்கலிதம், சோகைத் தன்மை, கிழத்தன்மை, ஞாபகமின்மை, பயம், அதைரியம், இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண் பெண் குறிகளில் உண்டாகும் ரோகங்கள், பாரிசவாயு, ஓடிவாதம், அஜீரணம் முதலிய வியாதிகள் தீரும்.

நேயர்களே! நாம் இதுகாறும் நம் ஆலயத்தைத் தேடிவந்தோர்க்கு மட்டுமே மேற்படி ஔஷதத்தைக் கொடுத்துவந்தோம். மேற்படி ஔஷதத்தை உண்ட சில அபிமானிகள் குணமறிந்து இத்தகைய அரிய ஔஷதத்தை பத்திரிகைகளில் பிரசுரம் செய்தால் பரோபகாரமாயிருக்குமென்று தூண்டியதின்பேரில் இவ்வித விளம்பரம் வரலாயிற்று. சென்னையில் சில கம்பெனிக்காரர்கள் ஏதோ லேகியங்களை அனுப்பி மோசடி செய்கிறார்களென்று கேள்விப் படுகிறோம். அவ்விதமாக இதை நினைக்காமல் தங்கள் தேவைக்கு எழுதுவீர்களென்று நம்புகிறோம். ஓம்-தத்-ஸத்.

40 நாள் அருந்தக்கூடிய அகஸ்தியர் ஆயுள் விருத்தி ஆகாரம் விலை ரூபா 7—0—0

20 நாள் அருந்தக்கூடியது. „ ரூபா 4—0—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

ஸ்தாபகர்:—

ஸ்ரீ ஸ்வாமி பிரும்மானந்தர் ஔடதாலயம்,
(599 சி) மின்டு பில்டிங்ஸ் போஸ்டு, சென்னை.

---

## மகா மன்மத சிந்தாமணி லேகியம்:

அபாரமான தாது புஷ்டியும், நீடித்த போக சக்தியும், இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும், பரமானந்த சுறுசுறுப்பும், தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரீக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு நயம். 45 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் நெ. 1 லேகியம் ரூ. 3—0—0. ஷை நெ. 2. லேகியம் டின் 1 க்கு ரூ. 2—0—0. வி. பி. வேறு. சகல நோய்களுக்கும் ஸ்நானபான அநுபான பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனா பஜார், மதராஸ்.

(10)

திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.